## 1.29 2001–2002 – கிராம நிர்வாக அலுவலர்களுக்கு கட்டிடம் – ஹட்கோ நிறுவனத்துக்கு செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டித் தொகை ரூ.5,32,07,000/– ஒப்பளிப்பு செய்தல்

ஊரக வளர்ச்சித் (மதி 1) துறை

அரசாணை (நிலை) எண்.77 நாள் : 21.06.2002

படிக்க :

1) அரசு (நிலை) ஆணை எண்.221, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 05–09–2001
2) அரசு (நிலை) ஆணை எண்.270, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 29–10–2001
3) அரசு (நிலை) ஆணை எண்.284, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 04–12–2001
4) அரசு (நிலை) ஆணை எண்.285, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 04–12–2001
5) அரசு கடித எண். 11189/மதி1/2002, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 22–03–2002
6) ஊரக வளர்ச்சி இயக்குநரின் நேர்முகக் கடித எண்.91345/2001/ திஅ2, நாள்.21.05.2002,05.06.2002 மற்றும் 10.06.2002

**ஆணை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி 2001–2002–ஆம் ஆண்டு கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ஊராட்சிமன்ற அலுவலகத்துடன் இணைத்து 4000 கிராம நிர்வாக அலுவலகக் கட்டிடம் கட்டலாம் என அரசு உத்தேசித்து அதன்படி அரச ஆணை (நிலை) எண்.270, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 29–10–2001–ல் 2001–2002–ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டத்தின் கீழ் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ஊராட்சிமன்ற அலுவலகத்துடன் இணைத்து 1650 கிராம நிர்வாக அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.9.90 கோடி அனுமதிக்கப்பட்டது. மீதமுள்ள 2350 கட்டிடங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

2) அரசின் நிதிநெருக்கடி காரணமாக மேற்படி கட்டடிம் கட்டுவதற்கு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழக நிறுவனத்திடமிருந்து (ரூ24.00 கோடி (4,000 x 60,000) கடனாகப் பெறப்பட்டது. இக்கடனைப் பெறும் முகவராக ஊரக வளர்ச்சி இயக்குநர் நியமிக்கப்பட்டார். இக்கடனையும் அதற்கான வட்டித் தொகையையும் திருப்பிச் செலுத்த தேவையான நிதியை வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்வதற்கான கருத்துருவை ஒவ்வோராண்டும் அனுப்புமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்பட்டார்.

3) தற்போது ஊரக வளர்ச்சி இயக்குநர் தனது கடிதத்தில் 2001–2002 பகுதி 2 திட்டம் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ஊராட்சிமன்ற அலவலகத்துடன் இணைந்து கிராம நிர்வாக அலுவலகக் கட்டிடம் கட்டுவது குறித்த செயலாக்கத்திற்கென வீட்டு வசதி மற்றும் நகர்புற மேப்பாட்டுக் கழக நிறுவனத்திடம் (Hudco) பெறப்பட்ட கடன் தொகை ரூ.2400 இலட்சத்திற்கு பின்வருமாறு 4 காலாண்டுகளுக்கு கடன் தவணைத்தொகை மற்றம் வட்டித் தொகை செலுத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

| செலுத்த வேண்டிய நாள் | கடன் தொகை | அசல் | வட்டி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 30.06.2002 | 2400.00 | 63.16 | 66.27 | 129.43 |
| 30.09.2002 | 2336.84 | 63.16 | 73.03 | 136.19 |
| 31.12.2002 | 2273.68 | 63.16 | 71.05 | 134.21 |
| 31.03.2003 | 2210.52 | 63.16 | 69.08 | 132.24 |
| | | 252.64 | 279.43 | 532.07 |

4) மேற்குறித்த விவரப்படி 2002–2003–ஆம் ஆண்டிற்கு இத்திட்டன்கீழ் பெறப்பட்ட கடன் மற்றும் வட்டித்தொகையை உறட்கோ நிறுவனத்திற்கு செலுத்த ரூ 532.07 இலட்சத்தை விடுவிக்குமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் கோரியுள்ளார். முதல் தவணைத் தொகை 30–06–2002ல் செலுத்தப்படவேண்டும் என்பதால் மேற்படி தொகையை விரைவில் விடுவிக்குமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் கோரியுள்ளார்.

5) ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவை நன்கு பரிசீலித்தபின் அரச 2001–2002–ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ஊராட்சிமன்ற அலுவலகத்துடன் இணைத்து கிராம நிர்வாக அலுவலக

கட்டிடம் கட்டுவது குறித்த செயலாக்கத்துக்காக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழக நிறுவனத்திடம் (Hudco) பெறப்பட்ட கடன்தொகை ரூ.24 கோடிக்கப் பின்வருமாறு 4 காலாண்டுகளுக்கு கடன் தவணைத்தொகை மற்றும் வட்டித் தொகையைச் செலுத்தும்பொருட்டு ரூ.5,32,07,000/– (ரூபாய் ஐந்து கோடியே முப்பத்து இரண்டு இலட்சத்து ஏழாயிரம் மட்டும்) ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு ஒப்பளிப்பு செய்கிறது.

| செலுத்த வேண்டிய நாள் | கடன் தொகை | அசல் | வட்டி | மொத்தம் |
|---|---|---|---|---|
| இலட்சத்தில் | | | | |
| 30.06.2002 | 2400.00 | 63.16 | 66.27 | 129.43 |
| 30.09.2002 | 2336.84 | 63.16 | 73.03 | 136.19 |
| 31.12.2002 | 2273.68 | 63.16 | 71.05 | 134.21 |
| 31.03.2003 | 2210.52 | 63.16 | 69.08 | 132.24 |
| | | 252.64 | 279.43 | 532.07 |

மேலே ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கு தேவையான நிதி 2002–2003–ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய நிதி கிடைக்கும் வரையில் அனுமதிக்கப்பட்ட தொயையைப் பெற்று வழங்க துறைத்தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

6) 30–06–2002–ஆம் காலாண்டுக்கான தொகையை உடினடியாகச் செலுத்தி அரசுக்கு உரிய அறிக்கை அனுப்புமாறும் ஒவ்வொரு காலாண்டுக்கும் கடன் மற்றம் வட்டித்தொகை திருப்பிச் செலுத்திய விவர அறிக்கைகளையும் தவறாமல் அரசுக்கு அனுப்புமாறும் ஊரக வளர்ச்சி இயகுநர் அறிவுறுத்தப்படுகிறார்.

7) மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை 2002–2003–ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கீட்டில் சேர்க்க நிதித்துறைக்கத் தவறாமல் கருத்துரு அனுப்புமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

8) மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட கடன் மற்றும் வட்டித்தொகை கீழ்வரும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்.

1. "6003-00 Internal Debt of the State Government – 109 Loans from other institutions –I Non Plan – AU loans from Housing and Urban Development Corporation (HUDCO) Limited for construction of offices for village administrative Officers." (DPC 6003 00 109 AU 0005) (Outgo)

2. "2049 Interest payment - 01 - interest on Internal debts – 200 - Interest on inten debts – 1 Non plan – BK Loans from the Housing and Urban Development Corporation (HUDCO) Limited for construction of offices for Village administrative Officers – 25 – Interest (DPC 2049-01-200 BK 2501)"

9) இவ்வாணை நிதித்துறையின் கூடுதல் ஒப்பளிப்பு எண்.176 உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எல்.என்.விஜயராகவன்**
அரசு செயலாளர்